Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 25 சனிக்கிழமை (08-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 101

# யாழ்.மாவட்டத்தில் கைதாவோருக்கு தெல்லிப்பழையில் புனர்வாழ்வு!

## அடுத்த மாதத்தில் இருந்து தெற்கே கூட்டிச் செல்லப்படமாட்டார்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் கைது செய்யப்படுவோர் மற்றும் சரண் அடைவோருக்கு புனர்வாழ்வளிப்பதற்காக அவர்கள் இனி மேல் தெற்கே கொண்டு செல்லப்படமாட்டார்கள்.

அவர்களுக்கென தெல்லிப்பழையில் புனர்வாழ்வு நிலையம் ஒன்று நிறுவப்படும். இப்பிரதேசத்தில் கைதாவோர் அடுத்த மாதத்தில் இருந்து இங்கு தங்க வைத்தே அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படும்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுக் காலை அமைச்சின் செயலாளர் சந்திரானந்த. டி. சில்வா தலைமையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பிரஸ்தாப மாநாட்டில் யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதனும் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கைது செய்யப்படுவோர் இப்போது தென்னிலங்கைக்குக் கூட்டிச் செல்லப்படுவதால் பெற்றோர்கள் அவர்களைச் சென்று பார்க்க முடிவதில்லை. இந்த முட்டுக்கட்டையினால் தமது பிள்ளைகளின் கதியை அறிய முடியாமல் பெற்றோர்கள் தவிக்கிறார்கள் பிள்ளைகளுக்கு என்னவும் நடந்திருக்கலாம் என்று சந்தேகப்படுகிறார்கள்—

இந்த நிலைமையைப்போக்குவதற்கு யாழ். மாவட்டத்திலேயே புனர்வாழ்வு நிலையம் ஒன்று விரைவில் நிறுவப்பட வேண்டும் — என்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் - விமான பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 8


காங்கேசன்துறையிலிருந்து நாளை ஞாயிற்றுக்கிழமை பயணிகள் கப்பல் சேவை ஒன்று நடைபெறவிருக்கிறது.

இக்கப்பலில் 500 பயணிகள் செல்ல வசதியுள்ளதால், யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 540க்கு உட்பட்டவர்கள் நாளை காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. என்றும் —

விமானத்தில் பயணம்

( 8ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப தீர்வே இல்லை எண்டு சொல்லுங்கோவன் ...... !

## இரணைதீவுக்கு அப்பால் வள்ளம் கைப்பற்றப்பட்டது

### அதில் இருந்த 8 இந்தியர் கைது

கொழும்பு, மார்ச் 8

யாழ். மாவட்டத்தில் இரணைதீவுக்கு அப்பால் நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினர் வள்ளம் ஒன்றைக் கைப்பற்றினர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த வள்ளத்தில் இருந்த எட்டுப் பேரும் இந்தியப் பிரஜைகள் ஆவர்.

இவர்கள் அனைவரும் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் தமக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் புலிகளுடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 8

மனித உரிமைப் பணிகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஒழுங்காக மேற்கொள்ள வில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டையடுத்து, அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் குழு ஒன்று மல்லாவியில் விடுதலைப் புலிகள் அமைப்பு பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியுள்ளது.

இச்சந்திப்பு இணக்கமற்ற நிலையில் முடிந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ-3-150)

## மாவட்ட இணைப்புக் குழுவின் கூட்டம் இன்று செயலகத்தில்

### தேவானந்தா தலைமையில்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்ட இணைப்புக்குழுவின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 2 அதிகாரிகள் உட்பட 65 படையினர் வவுணதீவு முகாம் தாக்குதலில் பலி!

### அரசு தரப்பில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 8

நேற்று முன்தினம் இடம்பெற்ற வவுணதீவு முகாம் மீதான தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட 65 படையினர் கொல்லப்பட்டதாகவும் 35 படையினர் காயமடைந்ததாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்றுத் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 200 பேர் வரை கொல்லப்பட்டிருப்பது தற்போது தெரிய வந்துள்ளதாகவும் —

120க்கும் மேற்பட்ட புலிகள் காயமடைந்துள்ளனர் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் வவுணதீவு இராணுவ முகாம் மீதான தாக்குதலில் கொல்லப்பட்டு நேற்று முன்தினம் பிற்பகல் வரை 70 இராணுவத்தினரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் —

முகாமில் அழிவுகளுக்குள் புதையுண்டு கிடக்கும் ஏனைய இராணுவத்தினரின் சடலங்கள் தேடப்பட்டு வருகின்றன என்றும் —

80 இராணுவத்தினருக்கு மேல் காயப்பட்டுள்ளனர் என்றும் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

(இ-3)

### வடக்கு -கிழக்கு இணைப்பு இல்லை

## மாகாண எல்லைகளை மாற்றியே இனப்பிரச்சினை தீர்க்கப்படும்

### பீரிஸ் மீண்டும் தெரிவிப்பு

லண்டன், மார்ச் 8

''இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மாகாண எல்லைகளை மாற்றியமைக்க வேண்டும். பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்காக குறிப்பிடத்தக்க மாற்றங்களை அரசு கொண்டு வரும்.''

இவ்வாறு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பி.பி.ஸி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு மாகாணங்களை இணைக்கக் கூடாது என்பதே அரசின் நிலைப்பாடாகும். அப்படி இணைப்பது எம் நோக்கமும் அல்ல. தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப எல்லைகளை மாற்றி அமைப்பதே எமது நோக்கமாகும்.

எல்லைகள் நிரந்தரமானவையல்ல சமுதாயங்கள் மாறும் போது அவற்றை மாற்றியமைப்பதும் அவசியமாகும்.

அரசியல் தீர்வுக்கான மக்கள் கருத்துக்கணிப்பு நடத்துவது குறித்தும் அரசு ஆராய்கிறது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கத் தவறினால் மட்டுமே கருத்துக்கணிப்பு நடத்தப்படும்.

வடக்கில் ஸ்திரத்தன்மை நாளுக்குநாள் ஏற்பட்டுவருகிறது 3 அல்லது 4 மாத காலத்தில் அங்கு ஸ்திர நிலையை ஏற்படுத்தி உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியும் என எதிர்பார்க்கிறோம் —

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3)

### வடக்கு-கிழக்கில் நிறுத்தப்பட்ட

## வறுமை நிவாரண முத்திரை திட்டம் மீண்டும் அமுலாகும்

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள வறுமை நிவாரண முத்திரைத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச அதிபர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்ற சமயம் வடக்கு—கிழக்கு அரச அதிபர்களின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## சீனிவாசகம் சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

எமது பாடசாலையில் கல்வி கற்பித்த ஆங்கில ஆசிரியர் அமரர் சீனிவாசகம் சிவசுப்பிரமணியம் அவர்கள் கல்வியில் வல்லவராய், நல்லாசானாய், கல்வித் தேவைகளுக்கு வாரி வழங்கும் வள்ளலாய் விளங்கினார். அவரின் மறைவு கல்வி உலகிற்குப் பாரிய இழப்பாகும். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பழையமாணவர், பெற்றோர்,
நலன்விரும்பிகள்.

யா/ சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க.
பாடசாலை. (9362)

# மரண அறிவித்தல்கள்

## சேனாதிராசா இராமநாதன்

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், இல: 40, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட சேனாதிராசா இராமநாதன் (மாமா) (மனேஜர் K. R. N. என்ரபிறைசெஸ், 5 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11, முன்னாள் நிர்வாகி வீடியோ பிரசாத், யாழ்ப்பாணம்) 5 - 3 - 97 இரவு யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நயினாதீவு சேனாதிராசா — மாணிக்கம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதி, துரையப்பா — சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், சந்திரலீலாவின் அன்புக் கணவரும், யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களான பிரசன்னா, பிரகாஷ், பிரவினின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பூமகள் (ஓய்வுபெற்ற ஆசிரியை — கொழும்பு), தங்கம் (நயினாதீவு), இலெட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை — இந்தியா), Dr. மீனாட்சி (மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை—மானிப்பாய்), நாகம்மா (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), சொர்ணம்(ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற பொன்னம்பலம் (சிலாபம்), ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன் (C. T. B. திருகோணமலை), காலஞ்சென்ற அன்னபூரணம், ஏரம்பமூர்த்தி (முழங்காவில்), தர்மராஜா (வர்த்தகர் கொழும்பு) ஆகியோரினதும் பரமேஸ்வரி (கனடா), K. R. நடராசா (வர்த்தகர் K. R. N. என்ரபிறைசஸ், கொழும்பு), காலஞ்சென்ற சிவபாதம், தியாகராசா (வர்த்தகர், இந்தியா), Dr. சின்னத்தம்பி (மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி), சந்திரன் (நிர்வாக அலுவலர், பிரதேச செயலகம், வேலணை), மகேஸ்வரநாதன் (மின்முகாரி, சிமெந்துத் தொழிற்சாலை, K. K. S), செல்வராணி (சிலாபம்), சுந்தரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை (8 – 3 - 97) இன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. சந்திரலீலா (மனைவி)
Dr. N. சின்னத்தம்பி (மைத்துனர்)
K. K, சந்திரன் (மைத்துனர்)
V. மகேஸ்வரநாதன் (மைத்துனர்)

இல:40, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (45680)

## திருமதி
## சிசிலியா பரிமளம் மனுவேற்பிள்ளை
## (அன்னபூரணம்)

போயிட்டி, இளவாலையைச் சேர்ந்த சிசிலியா பரிமளம் 7- 3- 97 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார்யோவாம்பிள்ளை மனுவேற்பிள்ளையின் அன்பு மனைவியும், மேரிவிக்ரோறியா, செபஸ்தியாம்பிள்ளை (அதிபர், யா/வயாவிளான் றோ. க. பாடசாலை), ஜெயரட்ணம், துரைரட்ணம் (சவூதி), ஜீவரட்ணம் (பிரான்ஸ்), குணரட்ணம் (லங்கா சிமெந்துலிமிட்டட்), மரியமலர் (கனடா), திரேசாமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், முடியப்பு, மேரியோசேப்பின் புஸ்பராணி, மேரிமாகிறேற், சுகுமாரி, கமலா, இராகினி, அருள்நேசன், மரியதாஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு போயிட்டி புனிதலூர்து அன்னை ஆலயத்தில் நடைபெற்று நல்லடக்கம் செய்யப்படும்.

உறவினர்களும், நண்பர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. செபஸ்தியாம்பிள்ளை
மகன்

போயிட்டி,
இளவாலை. (45691)

# புத்தளம் பகுதியில் தமிழ்க் கிராமம் படையினரால் சுற்றி வளைப்பு

## 20 பேர் தடுத்து வைப்பு

கொழும்பு, மார்ச் 8

புத்தளம்நகரிலிருந்துமூன்று மைல் தூரத்திலுள்ள மணல் தீவு தமிழ்க் கிராமம் கடந்த புதன்கிழமை அதிகாலை4.30 மணிக்கு இராணுவத்தினராலும் பொலீஸாராலும் சுற்றி வளைக்கப்பட்டது.

வீடுவீடாக தேடுதல் நடத்தப்பட்ட பின்னர் வயோதிபர்கள் உட்பட நூற்றுக் கணக்கானோர் அங்குள்ள அந்தோனியார் ஆலய முன்றலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களது தேசிய அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டன.

சந்தேகத்தின் பேரில் 20 பேர் புத்தளம் பொலீஸாரினால் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும்— ஏனையோர் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## தமிழ் வாலிபர் பதுளையில் கைது

கொழும்பு, மார்ச் 8

பதுளை நீதிமன்ற வளவுக்குள் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார் எனத் தெரிவித்து தமிழ் இளைஞர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

தான் ஒரு பத்திரிகையாளர் என்றும், செய்திகள் சேகரிக்கும் நோக்கில் அங்கு வந்ததாகவும் பிரஸ்தாப இளைஞர் கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முருங்கனைச் சேர்ந்த எம். எஸ். வேலாயுதம் என்பவரே கைது செய்யப்பட்ட நபர் ஆவார். (ஐ)

## அடையாள அட்டைகள்

ஜே/80 பெரியகடை, ஜே/81 கோட்டை ஆகிய பிரிவுகளுக்குரிய அடையாள அட்டைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9-00மணி முதல் ஜே/81 கோட்டை கிராமசேவையாளர் பணிமனையில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 8

சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை பரிசளிப்பு விழா நாளை மறுதினம் திங்கட் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் திரு. வி. ஏரம்பமூர்த்தி தலைமையில்நடைபெறும். பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆறு திருமுருகன் கலந்து கொள்வார். (ஐ)

## பாடகர் மரணம்

சென்னை, மார்ச் 8

பிரபல தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகர் சாகுல் ஹமீட் கடந்த திங்கட்கிழமை சென்னை விழுப்புரத்தில் கார் விபத்தொன்றில் மரணமானார். இறக்கும் போது அவருக்கு வயது36. அவர் சென்று கொண்டிருந்த கார் மீது லொறி ஒன்று மோதியதாலேயே இவ்விபத்து நிகழ்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 8

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## புதிய முதல்வர்

வடமராட்சி, மார்ச் 8

அமலமரித் தியாகிகள் சபைக் குருமாரின் வடபகுதி முதல்வராக வண. பிதா பிலுப்பையா யேசுநேசன் அடிகள் நியமிக்கப்பட்டுள்ளார்.

புலோலியைச் சேர்ந்த இவர் சிலகாலம் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி உப அதிபராகப்பணி புரிந்தார்.

இதே வேளை கொழும்புத்துறையில் அமலமரித் தியாகிகள் சபைக்குருமடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது வண, பிதா எஸ். எட்வின் அடிகள் இதன் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-173)

# புலமைப் பரிசில் '97

2-3-97 இல் எமது நிறுவனத்தில் நடத்திய 13ஆவது பயிற்சிப் பரீட்சையில் முதன்மைப் புள்ளி பெற்ற

செல்வி மகிழினி சிவலிங்கத்தை


பாராட்டுகிறோம்.

9 - 3 - 97 ஞாயிறு 14 ஆவது பரீட்சை வழமை போல் நடைபெறும்.

BOND INSTITUTES - யாழ்ப்பாணம்

(45693)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 02 — 1951

மறைவு: 23 — 01 — 1997

## இராசலிங்கம் இரத்தினசிங்கம்

அன்பாகவும், பாசமாகவும், மனதில் களங்கமில்லாக் கனிவுறு சொல்லினாலும், சிரித்த முகத்துடனும் எம்மை எல்லாம் வழிநடத்திய தலைவனே! உங்களை நாம் என்றும் மறவோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்.

கந்தசுவாமி கோயிலடி,
இணுவில் மேற்கு. (சி/262)

# தென்னிந்திய திருச்சபை, யாழ். ஆதீனம்
# தொழிற்பயிற்சி நிலையம்

எமது பெண்கள் பயிற்சி நிலையங்களில் நடத்தப்பட்ட பயிற்சிகள் முடித்து வெளியேறும் மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும், பொருட்காட்சியும் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**பொருட்காட்சி**

09-03-1997 (9-00 — 4-00 மணி)
15-03-1997 (9-00 — 4-00 மணி)
22-03-1997 (9-00 — 4-00 மணி)

**பட்டமளிப்பு**

மானிப்பாய் — 08 - 03 - 1997
இணுவில் — 14 - 03 - 1997
வட்டுக்கோட்டை — 21 - 03 - 1997

பட்டமளிப்பு விழா மாலை 2-30 மணிக்கு ஆரம்பமாகும்.

## புதிய வகுப்புகள்

வட்டுக்கோட்டை, மானிப்பாய், இணுவில் ஆகிய இடங்களில் நடைபெறும் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்களில் பின்வரும் பாடங்கள் மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

**விண்ணப்ப முடிவு திகதி: 25-03-1997**

**பாடங்கள்:**
தையல், மனைப் பொருளியல், கைவேலை, சிகைஅலங்காரம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
கிறீன் வைத்தியசாலை, மானிப்பாய்.

பணிப்பாளர்,
தொழிற்பயிற்சி நிலையம்.

(சி/261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குக் கரையில் இருந்து மேலும் இஸ்ரேலிய துருப்புக்கள் வாபஸ்!

## நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது

ஜெருஸலேம், மார்ச் 8

சர்ச்சைக்குரிய மேற்குக்கரைப் பகுதியில் இருந்து மேலும் துருப்புக்களைத் திருப்பி அழைக்க இஸ்ரேலிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி விட்டது.

ஏழு மணி நேர விவாதத்தின் பின்னர் இது தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

மேற்குக் கரையில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சுமார் 9 சதவீதத்தை பலஸ்தீன சுயாட்சிக்குக் கையளிப்பதும் இப்பிரேரணையில் அடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய பிரதமரின் இந்த பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பது தற்போது எழுந்துள்ள பலஸ்தீனியர்களுடனான கொந்தளிப்பு நிலைமை தணிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு ஜெருஸலேமில் பலஸ்தீனியர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் யூத குடியிருப்புகளை அமைக்க இஸ்ரேல் பிரதமர் எடுத்த முடிவு மத்திய கிழக்கில் பதற்றத்தை மீண்டும் உருவாக்கி விட்டிருப்பது தெரிந்ததே.

தற்போது நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலம் பலஸ்தீனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் இஸ்ரேலின் ஆளும் கூட்டணி அரசாங்கத்தில் பிளவை ஏற்படுத்தக் கூடும் என்று கருதப்படுகிறது.

இஸ்ரேல் பிரதமரின் இந்த பிரேரணைக்கு ஆதரவாக 10 வாக்குகளையும், எதிராக 7 வாக்குகளையும் பெற்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. (ஐ)

## அதி உயர் தொழில்நுட்பம் கொண்ட

# ஏவுகணை பரிசோதனையில் அமெரிக்கா மீண்டும் தோல்வி!

அமெரிக்க இராணுவத்தை உலகில் எங்கிருந்து தாக்கினாலும் உடனடியாக எதிர்த் தாக்குதலை நடத்திப் பாதுகாத்துக் கொள்ளும் உயர் தொழில் நுட்பம் கொண்ட ''ஸ்கட்'' ஏவுகணை பரிசோதனையில் நான்காவது முறையாக அமெரிக்கா தோல்வி கண்டுள்ளது.

''ஸ்கட்'' நடுத்தொலைவு ஏவுகணை அடுத்த நூற்றாண்டில் பாதுகாப்புத் துறையில் அதிக தொழில் நுட்பமும் ஆற்றலும் நிறைந்தது எனக் கருதப்படுகிறது.

இது மிகவும் முக்கியமான திட்டம் என்பதால் சோதனைகள் தொடரும் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ-10)

## நேட்டோ விஸ்தரிப்பு

# கிளின்ரன் - யெல்ட்சின் இம்மாதம் பேச்சு

அமெரிக்க அதிபர் பில் கிளின்டனுக்கும், ரஷ்ய அதிபர் மொறிஸ் யெல்ட்சினுக்கும் இடையே உச்சக்கட்டப் பேச்சுவார்த்தைகள் இம்மாதம் 19 ஆம் 20ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேட்டோ விரிவாக்கம் பற்றிய இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தைகள் தொடர்பகா இச்சந்திப்பின் போது ஆராயப்படும்.

அமெரிக்காவின் நேட்டோ விரிவாக்கத்திட்டத்தை யெல்ட்சின் கடுமையாக எதிர்த்துவருகிறார் என்பது தெரிந்ததே. (ஐ-10)

# ரஷ்ய அமைச்சரவை விரைவில் மாற்றம்

## புதிய துணைப் பிரதமர் நியமனம்?

மொஸ்கோ, மார்ச் 8

ரஷ்யாவில் அடுத்த சில தினங்களில் அமைச்சரவை மாற்றி அமைக்கப்படவுள்ளது. பலமுக்கிய மாற்றங்கள் இடம் பெறும் என மொஸ்கோ தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்பார்வையிட பொருத்தமான துணைப் பிரதமரை அதிபர் யெல்ட்சின் நியமிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அமைச்சரவை மாற்றத்தின் போது பிரதமர் விக்ரர் செர்னோமிடின் உட்பட பலர் பதவி நீக்கம் செய்யப்படலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

கடும் சுகயீனத்தில் இருந்து மீண்ட அதிபர் யெல்ட்சின் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழனன்று உரையாற்றினார்.

நாடு மிகவும் மோசமான சீரழிவுகளைச் சந்தித்துள்ளது என்பதையும், தற்போதைய அரசு நாட்டின் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் தவறிவிட்டது என்பதையும் அவர் தனது உரையில் ஏற்றுக்கொண்டார். (ஐ-10)

## விண்கலத்தை இணைக்கும் முயற்சி தோல்வி

மொஸ்கோ, மார்ச் 8

விண்வெளியில் வலம் வரும் ரஷ்யாவின் ''மீர்'' சோதனைக் கலத்துடன் பொருள்களை எடுத்துச் சென்ற விண்கலத்தை இணைக்க விஞ்ஞானிகள் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன.

அந்த விண்கலம் விண்வெளியில் தற்போது செயலிழந்து சாம்பராகும்படி விடப்பட்டுள்ளது. (ஐ-10)

# உலக அரங்கில்

## இந்திய-பாக். பேச்சுவார்த்தை

இந்தியாவும் பாகிஸ்தானும் வெளியுறவுச் செயலர்கள் மட்டத்திலானபேச்சுவார்த்தைகளை எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளன.

இந்தியாவுடனான பேச்சுவார்த்தை நிரலில் காஷ்மீர் விவகாரம் முதலிடத்தில் இருக்கும் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சம்ஷாத் அகமத் தெரிவித்தார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி இவர் புதுடில்லியில் இந்திய உள்விவகார அமைச்சரைச் சந்திப்பார். மூன்று ஆண்டுகளின் பின்னர் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே இடம்பெறும் முதலாவது பேச்சுவார்த்தை இதுவாகும். (ஐ)

## கயானா அதிபர் மரணம்

கயானா நாட்டின் அதிபர் செட்டி ஜெகன் (வயது 78) இருதய நோய் காரணமாக அமெரிக்காவின் வாஷிங்டன் ஆஸ்பத்திரியில் காலமானார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர் கடந்த மூன்று வாரங்களாக சுகயீனமடைந்திருந்தார். (ஐ)

# வீட்டுக்கும் சமூகத்துக்கும் விரிந்துள்ள மகளிரின் பொறுப்பும் பங்களிப்பும்

## பெண்களே பெண்களை அங்கீகரிக்கும் நிலை அவசியம்

சர்வதேச மகளிர் தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை இங்கே பிரசுரமாகின்றது.

த. கர்ணி

இன்று உலகளாவிய ரீதியில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் பெண்களின் சமூக நிலை, சமூக இயக்கத்திற்கு அவர்களது பங்களிப்பு மற்றும் பெண்களின் உரிமைகள் பற்றிப் பல்வேறு கோணங்களில் செய்திகளை வெளியிடுகின்றன. இந்த உலகப் போக்கிற்கு அமைய எமது பிரதேச நங்கையர்கள் இயைபாக்கம் பெற்று வருகின்றார்களா? அவர்களால் எவற்றை எல்லாம் சாதிக்க முடிகின்றது? இனி அவர்களுடைய சாதனைகள் என்ன? இவற்றிற்கு வழிகாட்டி உதவுபவர்கள் யார்? என்பவை பற்றிச் சிந்தித்தல் எமது பெண்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

சமுதாயத்தில் பொருளாதார, கலாசார, நாகரிக மாற்றங்கள் மிக விரைவாக நிகழ்ந்து வருகின்றன. இவ்வாறான மாற்றங்களுக்கு ஏற்ப தம்மை இயைவு படுத்திக்கொள்ள வேண்டிய பொறுப்பு இன்றைய பெண்களுக்குத் தேவை. நல்ல சமூக வாழ்க்கையின் தன்மையைத் தீர்மானிக்கும் அடிப்படை அலகு குடும்பமாகும். இன்று குடும்பச்சூழல், குடும்ப உறவு தளர்ச்சி அடைந்து வருவதாக சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

வாழ்க்கை முறை மாற்றங்கள், ஒவ்வொரு குடும்பத்தினதும் பொருளாதாரத் தேவையின் எதிர்பார்ப்புக்கள், விரிவடைவதால் குடும்ப வருமானத்தை உறுதிப்படுத்த ஆண்களும், பெண்களும் தொழில்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் குடும்பத் தலைவியோ, தலைவனோ பொருள் ஈட்டுவதற்கு வெளியிடம் அல்லது வெளிநாட்டிற்குச் செல்கின்றார்கள். பொருளீட்டுதல், குடும்ப வாழ்க்கைத்தரம், பொருளாதாரத் தரம் என்பனவற்றை உயர்த்தும் என்பது உண்மையாயினும் அது பிள்ளை, பெற்றோர், குடும்ப அங்கத்தவர் தொடர்புகள் பாதிப்படையக்கூடிய சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும். குறிப்பிட்ட காலம் குடும்ப அங்கத்தவர் பிரிந்திருக்கவும் நேரிடுகின்றது. இதனால் குடும்பப் பாரம்பரியம், விழுமியங்கள் என்பன பாதிக்கப்படுகின்றன.

தாயின் அரவணைப்பை இழந்த குறை, தந்தையிடம் பெற வேண்டிய முன்மாதிரிகளை இழந்தநிலை, பிள்ளைகளுக்கு ஊட்டப்பட வேண்டிய அன்பு, ஆதரவு, குடும்ப ஒழுக்கம், பழக்கவழக்கங்கள், மனித விழுமியங்கள் கிடைக்காமல் போகின்றன.

தாய்ப்பால் அருந்தும் குழந்தை தாயின் அரவணைப்பினால் கிடைக்கும் ஸ்பரிசத்தால் மன உறுதி, பிறரிடம் அன்பு, சமூக ஈடுபாடு ஆகியவற்றைப் பெற வழியேற்படுகின்றது. எனவே ஒரு பிள்ளை தாயுடன் பழகுவதற்குரிய சந்தர்ப்பங்கள் அருமையாக இருந்தால் அக்குழந்தைக்குப் பல சந்தேகங்கள் உண்டாக அவை மனவெழுச்சிப் பிரச்சினைகளையும், ஆளுமைச் சீர்கேடுகளையும் ஏற்படுத்துமென உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். தாய்மை என்ற மிக உயர்ந்த பங்கைப் பெண்கள் பெற்றதும் கடும் பொறுப்புக்களும் அவர்களைச் சாருகின்றது.

விரைவான சமூக மாற்றங்களினால் குடும்பங்களில் பிளவுகளும் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. முன் எப்போதும் இல்லாதவாறு உற்பத்தியுகத்தில் நாம் வாழ்கின்றோம். மனித வரலாற்றில் இவ்வளவு வேகமான அபிவிருத்தியும், பாரிய மாற்றங்களும் முன்னர் ஏற்படவில்லை. இதற்கு ஏற்ப எமது நங்கையர் இயைபாக்கம் அடைய வேண்டும்.

இவ்வகையில் தற்பொழுது எமது பெண்கள் கல்வி நிலையில் மேம்பாடு அடைந்து வருகின்றார்கள். அவர்களுக்குப் பெரும்பாலும் சமஅந்தஸ்து வழங்கப்படுகின்றது. இந்த நிலை பெண்களுக்கு அதிக சுதந்திரத்தைக் கொடுத்துள்ளது. பெண்களும் ஆண்களைப் போல உரிமைகளை அனுபவிக்க சுதந்திரம் உடையவர்கள் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இப்பொழுது அரசியல், வர்த்தகம், போக்குவரத்து, பாதுகாப்புச் சேவைகள் எனப் பல துறைகளில் பெண்கள் ஈடுபட்டுள்ளார்கள். உழைக்கின்றார்கள், பணம் சம்பாதிக்கின்றார்கள். அவர்களது வருமானத்திலேயே குடும்பங்கள் இயங்க வேண்டிய நிலையும் உள்ளது. இது ஆரோக்கியமான நிலைதான்.

எனினும் இலங்கையின் நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து உத்தியோகம், மேற்படிப்பு எனக் குடும்பப் பெண்கள் வீட்டைவிட்டுச் செல்வதால்குடும்பத்தில் பிரச்சினைகள் - பிளவுகள் ஏற்படுவதுடன் பிள்ளைகளையும் சரியாகக் கவனிக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் குடும்பப் பொருளாதாரத்தையும், வீட்டுப் பொறுப்பையும் செய்யும் ஒரு சராசரிப் பெண், மிகக் கூடுதல் பொறுப்புக்களைச் சுமக்க வேண்டியுள்ளது.

இந்த வகையில் இன்றைய சூழலில் பெண்களுடைய பொறுப்பும் பங்களிப்பும் குடும்பத்திற்கு மட்டுமல்ல சமுதாயத்திற்கும் விரிந்துள்ளது. அதற்கான தகுதியையும் பெருமளவில் எமது பெண்கள் பெற்று விட்டாலும் அதைச் சரியாகப் பயன்படுத்தாமல் உள்ளமையும், ஏனையவர்களையும் குறைகூறி அவர்களது சேவைகளுக்கு இடையூறுகளை விளைவித்தலுமே எமது சமுதாயத்தில் புரையோடியுள்ளது. முதலில் பெண்கள் தம்மைத் தாமே அங்கீகரிக்க வேண்டும். பெண்களே பெண்களின் நற்செயற்திட்டங்களுக்கு இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும்: தொடர்ந்து நல்ல மனப்பாங்கினூடாக ஒன்றிணைந்து பெண்கள் செயற்படல் நல் விளைவுகளைத் தரும். எமது கைக்கு எட்டிய வரை நற் சேவைகளைக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் செய்வோம். அதுவே இன்றைய தேவையாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு- கிழக்கு மாகாணத்தில்

# புதிய கல்வி நிர்வாகக் கட்டமைப்பை அமுல் செய்ய அதிகாரிகள் இல்லை!

திருகோணமலை, மார்ச் 8

வடக்கு — கிழக்கு மாகாணங்களில் அதிகாரிகளின்பற்றாக்குறை காரணமாக கல்வி நிர்வாகக் கட்டமைப்பை அமுல்படுத்த முடியாதிருப்பதாகவும் உத்தேச கல்வி வலயங்களுக்கு பொருத்தமானஅதிகாரி இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய மாகாணங்களில் இந்தப் புதிய நடை முறை கடந்த ஜனவரி மாதத்தில் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாணங்கள் 20 கல்வி வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த 20 வலயங்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்க இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 ஆம் வகுப்பைச் சேர்ந்த 20 அதிகாரிகள் தேவை

உத்தேச அமைப்பின்படி ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படவேண்டும். இவர்களும் இலங்கை கல்வி நிர்வாக சேவை -1 ஆம் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு கல்வி வலயத்திலும் திட்டமிடுதலும் அபிவிருத்தியும், கல்வி நிர்வாகம் மற்றும் பாடசாலைகளின் செயற்பாடுகள் ஆகியவைறைக் கவனிக்க இலங்கை நிர்வாக சேவை 2 ஆம் வகுப்பைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் தேவை. இதன்படி 20 கல்வி வலயங்களுக்கும் 60 அதிகாரிகள் தேவைப்படுகின்றனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 ஆம் வகுப்பைச் சேர்ந்த ஓர் அதிகாரி கூட இல்லாத நிலையில் உத்தேச புதிய திட்டத்தை வடக்கு —கிழக்கில் அமுல்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ — 10)

## தபால் ஊழியர் ஆட்சேபம்

தொலைத் தொடர்புத் திணைக்களம் மூடப்படுவதையும் —

10 வருட சேவையைப் பூர்த்திசெய்யாத ஊழியர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்படாததையும் — எதிர்த்தும் தபால் தொலைத்தொடர்பு ஊழியர்களின் தொழிற் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளது.


# அரசாங்க அறிவித்தல்

## அரசினர் பொது வைத்தியசாலை
**யாழ்ப்பாணம்**

## 1997 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் திருத்துநர்களையும் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் வழங்கக்கூடியவர்களிடம் இருந்து பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. (டயர், ரியூப் உட்பட) மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், வாகனத்திருத்தம்
2. தட்டச்சு இயந்திரம், றோணியோ இயந்திரம், போட்டோஸ்ரற் இயந்திர உதிரிப்பாகங்கள், திருத்த வேலைகள்.

மேற்படி சேவைகளுக்காகப் பதிவுசெய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தை எனது பணிமனையில் ரூபா 25/- பதிவுக்கட்டணமாகச் செலுத்திப் பெற்று 15-03-97 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வைத்திய கலாநிதி (செல்வி) என். கனகரத்தினம்**
பணிப்பாளர்

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம், 06.03.97 (சி/254)



# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கார்த்திகேசு விஜயரட்ணம்
[உப தபாலதிபர் - வேலணை]

எமது வகுப்பு மாணவன்

**செல்வன் வி. எடிசனின்**

தந்தையாரின் மரணத்தையிட்டு, அவரது குடும்பத்தாருக்கு எமது வகுப்புசார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்

**ஆண்டு 11 மாணவர்கள்,**
**யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி.**

[9355]



# முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம்: 30 — 01 — 1926



உதிர்வு: 08 — 03 — 1996

## திருமதி சு. லீலாவதி

(Daughter of Sinnathamby, Superintendent of Works U. D C., Wife Of Late Subramaniam, Superintendent of Works, (Hospital)

ஆண்டுகள் எத்தனை போனாலும் மறக்காது உங்கள் சிரித்தமுகம். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கொக்குவில், மேற்கு ஸ்ரீ வராகி அம்மனை வேண்டுகின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி. (9354)


## தவக்காலச் சிந்தனை
(25நாள் சனிக்கிழமை)

'அவரைக்குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது' (அரு, 7:43) அன்றைய மக்களும் இயேசுவுக்குச் சார்பாக, எதிராக என இரண்டு பிரிவாக வாழ்ந்தனர். ஏன் இன்றும் வாழ்கின்றனர். இதில் நான் எப்பகுதியில் நிற்கின்றேன் நற்செய்தியில் பரிசேயர் எப்போதும் இயேசுவுக்கு எதிரிகளாகவே காட்டப்படுகின்றனர்; இவர்கள் இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்த மக்களையும் ஏளனம் செய்தனர். ''திருச்சட்டம் அறியாத இக் கூட்டம் சாபத்திற்குள்ளானது'' (அரு 7.49) என்று. சாபமிட்டுப் பழிக்கின்றனர். நாமும் இவர்களைப் போல் தீர்ப்பிடுவதில்லையா? எனது குடும்பத்தில், நான் வாழும் சமுதாயத்தில், பணிபுரியும் பணித்தலத்தில் எனது தீர்ப்பு எவ்வாறு அமைகிறது நிக்கே தேமு அன்று சட்டத்திற்கு எதிராக இயேசுவுக்கு: தீர்ப்பளிப்பது தவறு என்று சுட்டிக்காட்டினார், இன்று அநீதிகள், அக்கிரமங்கள், மிகுந்து உண்மையைத் தேடும் காலகட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், அநீதி அக்கிரமங்களுக்கு எதிராகத்துணிந்து குரல் கொடுக்க தவக் காலம் நம்மையும் அழைக்கின்றது.

சூ, மரியநாயகம்.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம் பெற்று வந்த ''தொடர்பியலுக்கான ஆங்கிலம்'' எனும் கற்கை நெறி தொகுதி 9இன் நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புற நிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் திரு. இரா.சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் கலந்து கொள்வார். (ஐ)

## சேதமடைந்த தபால் பெட்டிகள்

சுழிபுரம், மார்ச் 8

சுழிபுரம் தபால் கந்தோர் முன்பாகவும் சுழிபுரம் காளுவன் சந்திக்கு அருகாமையிலும் பண்ணாகம் உப தபால் அலுவலகத்திற்கு முன்பாகவும் இருந்து வந்த தபால் பெட்டிகள் பழுதடைந்துள்ளதால் இப்பகுதி மக்கள் கடிதங்களை தபாலில் சேர்க்க தபால் கந்தோர் திறக்கும் வரை காத்திருக்க வேண்டிய நிலை இருந்து வருகிறது.

(இ-118)

# சகல கொடுமைகளுக்கும் எதிராக பெண்கள் போராட வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) விடுத்த செய்தி வருமாறு:-

இன்று சர்வதேச மகளிர் தினம். பெண்கள் அடைந்துள்ள வெற்றிகள் குறித்தும் எதிர்நோக்கும் சவால்கள் குறித்தும் உலகம் முழுவதும் அலசப்படலாம். நாம் இத்தினத்தில் என்ன செய்வது? எமது நாட்டில் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அவலத்தினுள் சிக்கியிருக்கும் பெண்களின் விடிவுக்காக சில உறுதிப்பாடுகளைமேற்கொள்ளும் தினமாக இதனைப் பிரகடனம் செய்வோம்.

சில மாதங்களின் முன்னர் கிருஷாந்தி, ரஜனி ஆகியோர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதானது யுத்தம் எந்தளவிற்கு குரூரமான வன்முறையைப் பெண்கள் மீது ஏவிவிட்டிருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். நாளாந்தம் அவர்கள் சோதனைச் சாவடிகளிலும் தடுப்பு முகாம்களிலும் சந்திக்கும் அநாவசியமான தாமதங்களும், வக்கிரமான பார்வைகளும் அவமரியாதைகளும் கொஞ்சநஞ்சமல்ல. தொடர்ந்து இந்தச் சமுதாயத்திலே வாழ வேண்டும் என்பதற்காக எத்தனையோ நாளாந்த அவலங்கள் வெளியுலகிற்குத் தெரியாமல் போய்விடுகின்றன.

மறுபுறம் பெண்கள் யுத்தத்திற்குப் பயன்படுத்தப்படும் கருவியாக மாற்றப்பட்டிருக்கிறார்கள், ஆண்களின் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக இடைவெளி நிரப்பிகளாகவே இங்கு பெண்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். வாழ்வின் குறியீடாக இருக்கும் பெண்கள் மரணத்தை [illegible] டிருக்கிறார்கள். அவர்கள் தீர்மானம் எடுப்பவர்களாக இங்கில்லை. அவர்கள் வெடிகுண்டின் பகுதிகளாக மாற்றப் பட்டிருக்கிறார்கள்; அல்லது ஏனைய ரக ஆயுதங்களின் பகுதிகளாக மாற்றப் பட்டிருக்கிறார்கள். அதாவது அஃறிணைப் பொருளாக சித்திரிக்கப்படுகிறார்கள். பின்தங்கிய கிராமங்களில் வறிய குடும்பங்களில் பிறந்த - வெளியுலகைக் காணத் துடிக்கும் — பெண்கள் இவ்வாறு மரணத்தை நோக்கி அழைத்துச் செல்லப் படுகிறார்கள்.

சிறந்த அரசியலாளர்களாக - சமூகவியலாளர்களாக - இன்றைய அவலம் தொடர்பாக கேள்வி எழுப்புபவர்களாக - பொது சமுதாயத்திலிருந்து வெளிக் கிளம்பிய சில முற்போக்கு இயக்கங்களின் பெண்கள் அவமானங்களுக்கும் இழிவுகளுக்கும் உட்படுத்தப்பட்டார்கள். கலாநிதி ரஜனி திரணகம, கவிஞர் செல்வி போன்றவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது யாரும் அறியாததல்ல. வாழ்தலை அடிப்படையாகக் கொண்டு ஆரோக்கியமான சமூகப் பார்வையுடன் உருவாகிய அத்தனையுமே இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்பட்டன.

தவிர வவுனியா தடுப்பு முகாம்களிலும், வேறுபல இடங்களிலும் தமிழ்ப் பெண்கள் தமது தனித்துவத்தைப் பேணமுடியாமல் அவலமுறுகின்றனர். வதைமுகாம்களிலும் சிறைக்கூடங்களிலும் ஆ களாலேயே விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர்.

தேவாலயத்தின் மீது வீசப்பட்ட விமானக்குண்டுகளால் சிதறிப் போனவர்களும், எல்லைச் சிங்களக் கிராமங்கள் மீது நடத்தப்பட்ட குரூரத்தனமான தாக்குதல்களில் கண்டதுண்டமாக வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டவர்களும் பெருமளவில் பெண்களும் குழந்தைகளுமே.

இதேபோல் இன்று காணாமல் போயிருப்போரில் ஒரு கணிசமான பகுதியினர் பெண்கள் என்பதனை எவரும் மறுத்துவிட முடியாது.

1990 இல் இடம்பெற்ற முஸ்லிம் மக்களின் பலாத்கார வெளியேற்றமும் 1995 இல் நடத்தப்பட்ட வலிகாமம் வெளியேற்றமும் பெண்களின் மீது சொல்லொணா சுமைகளையும் துன்பங்களையும் திணித்தன.

இறுதியாக இந்தியாவிற்கு ஓடுவதா, அல்லது வவுனியாவிற்குள் ஓடுவதா எனத் திகைத்த பெண்களும், குழந்தைகளும் அளவுக்கதிகமாக ஒரு சிறு வள்ளத்தில் ஏற்றப்பட்டு நாச்சிக்குடாக் கடலில் விடப்பட்டார்கள். அகதிகளான இந்த மக்களின் அவலங்கள் ஒரு சர்வாதிகார இயக்கத்தின் பிரசார நோக்கத்திற்கு மூலதனமாக்கப் பட்டது.

அடுத்து மலையகத் தோட்டங்களில் லயன், தோட்டம், குழந்தை மடுவம் என இயந்திரம் போல் சுழன்று கொண்டிருக்கும் மலையகப் பெண்கள் கவனத்திற்குரியவர்கள் ஆகின்றார்கள். சகல தளங்களிலும்ஆணாதிக்கம் உழைப்புக்கேற்ற ஊதியமின்மை, சுகாதாரவசதியின்மை, போசாக்கின்மை, ஓய்வின்மை, குழந்தைகளுக்குத் தகுந்த பராமரிப்பின்மை, பசியின் கொடுமைகளால் அல்லலுறும் தோட்டத் தொழிலாளப் பெண்கள் கவனத்திற்குரியவர்களாகிறார்கள்.

அவர்கள், கணவன்மார், தந்தைமார், சகோதரர்களது ஆதிக்கத்திற்கு மாத்திரம் உட்படவில்லை. 9-11மணி நேரம் தோட்டம், பிள்ளை மடுவம், லயன் என வேலை செய்கிறார்கள்.

இதேபோல் மத்தியகிழக்கில் வீட்டுப்பணிப் பெண்களாகச் செல்லும்பெண்களில் ஒரு பகுதியினர் ஊதியமின்மை எஜமானின் சித்திரவதை, பாலியல் பலாத்காரம் என்பவற்றுக்கு உள்ளாகிறார்கள்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர்

## பரி. யோவான் கல்லூரி
**யாழ்ப்பாணம்.**

க. பொ. த. உயர்தரம் 1997 பரீட்சைக்கு இரண்டாம் தடவை தோற்ற விரும்பும் மாணவர்கள் பாடசாலைக் காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

— **அதிபர்.**

(சி-259)

## கண்ணீர் அஞ்சலி

**வேலணை பிரதேச செயலக நிர்வாக அலுவலர்**
**திரு. கே. கே. சந்திரன்** அவர்களின்
அருமை மைத்துனர்

### அமரர் சேனாதிராசா இராமநாதன்
(நயினாதீவு)


அவர்களின் திடீர் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம். துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உதவி அரசாங்க அதிபர்,**
**அலுவலர்கள்,**
**கிராம அலுவலர்கள்,**
**சிற்றூழியர்கள்.**

**பிரதேச செயலகம்,**
**தீவுப்பகுதி தெற்கு,**
**வேலணை.**

(45686)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 15 — 02 — 1938

உதிர்வு: 07 — 02 — 1997

### அமரர் திருநாமம் மகேந்திரன்
(திரு. திருநாமம் – மலேயன் பென்ஷனர், திருமதி தி. பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அன்புமகன்)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (8-3-97) சனிக்கிழமை தாவடி தெற்கில் உள்ள இல்லத்தில் நடைபெற இருப்பதால், ஷிகிரியைகளிலும், மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றி உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி இரத்தினமணி மகேந்திரன்**
(மேறறன் - அரச சிறுவர் இல்லம்)

தாவடி தெற்கு,
கொக்குவில்.

(45671)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 14 — 05 — 1953

விண்ணில்: 01 — 03 — 1995

### செல்லத்துரை அம்பிகைபாலன்
(முன்னாள் தொழில் நுட்ப உத்தியோகத்தர், உதவி அரசாங்க அதிபர் செயலகம், யாழ்ப்பாணம்)

**திதி: 08 - 03 - 1997**

அப்பாவே! அப்பாவே!! பாசமிகு அப்பாவே!!!
ஆண்டிரண்டு போனாலும் ஆறுமோ எம் மனம்
பாதிவழி தனியே பறந்தோடிப் போனீரே
பற்றக் கொடி கொம்பின்றித் தவிக்கின்றோம் நாம்.

ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**அன்பு மனைவி, மகள், மகன்.**

'மலர் வாசா'
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(45340)

# சகல கொடுமைகளுக்கும்...

(நான்கம் பக்கத் தொடர்)

சிறைவாழ்க்கை போன்ற ஓர் அடிமை வாழ்க்கை வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள். இவை பல தடவை நிகழ்ந்தும் இவர்களது பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படவில்லை. எழுத்தில்ஏதாவது இருக்கலாம்.ஆனால் நடைமுறையில்எதுவும் இல்லை. ல்

**சர்வதேச அரங்கில்**

சர்வதேச அளவில் இன்று ஆப்கானிஸ்தானில் நடக்கும் தலிபானின் பெண்களுக்கெதிரான அடக்குமுறை அவர்கள் வேலைக்குச் செல்வதற்கு தடைவிதிப்பதாக அமைந்துள்ளது. வீடுகளை விட்டு அவர்கள் வெளியே நடமாட முடியாது; முகத்திரை முற்றாக மூடப்பட வேண்டும்; இல்லையேல் அவர்கள் பகிரங்க சவுக்கடி உட்பட எல்லாவிதமான அவமானங்களையும் சந்திக்க வேண்டும்.

பொஸ்னியாவில் நடைபெற்ற இனச்சுத்திகரிப்பு முஸ்லிம் பெண்களைப் பாலியல்பலாத்காரத்திற்கு உட்படுத்திசிறையில் தள்ளி அவர்கள்விரும்பாத குழந்தையை ருவாக்கிய பிறகு விடுதலைசெய்வதுஎன்றளவிற்குச் சென்றது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் றுவாண்டாவில் நடைபெற்ற ''டுட்சி'' இனப்படுகொலையில் ஓர் இலட்சம் பேர் ஓரிரு தினங்களில் கொல்லப்பட்டார்கள். இதில் பெரும்பான்மையோர் பெண்களும் குழந்தைகளுமே.

தற்போது ஸயருக்கு அகதிகளாக இடம்பெயர்ந்த 'ஹுட்டு' இனத்தவரை ஒரு விதமான பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு பேராட்சி நடத்துகிறார்கள். யு. என். எச்.சி.ஆர் போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் வழங்கும் உதவிகளை தமது தேவைகளுக்கு அபகரித்துக் கொண்டு, அகதிகளான மக்களுக்கு பெருந்தீங்கு விளைவித்து வருகிறார்கள். இங்கும் பெருமளவில் அவதியுறுபவர்கள் பெண்களும் குழந்தைகளுமாகவே இருக்கிறார்கள்.

பர்மாவின் எல்லைக்கிராமங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட 'கரேண்' இன மக்கள் தாய்லாந்து காடுகளில் பட்டினிச்சாவை எதிர்நோக்கி நிற்கின்றார்கள். யு.என்.எச்.சி.ஆர் போன்ற ஸ்தாபனங்கள் திகைத்து நிற்கின்றன.

உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் பெண்கள் எதிர்நோக்கி நிற்கும் தீவிர அடக்கு முறைகளைச் சுட்டிக் காட்டவே இவற்றைக் குறிப்பிட்டோம்.

இது எப்படி இருப்பினும் இந்தத் தீவிர அடக்குமுறைக்கு எதிராகப்போராடுவதும் அரசியலில் சமபங்கைப் பெறுவதும் இன்றைய வரலாற்று அவசியமாகி விட்டது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் 90 களிலேயே பெண்கள் முன் எப்போதும் கண்டிராத அடக்கு முறைகளைச் சந்திக்கின்றார்கள்.

நாம் இந்த மார்ச் 8 இல் —

பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தி, ரஜனி ஆகியோரை நினைவு கூருவோம்.

ஜனநாயக உரிமைக்காகக் குரல் கொடுத்ததற்காக கொல்லப்பட்ட ரஜனி திரணகம, செல்வி ஆகியோரை நினைவு கூருவோம்.

★ தேவாலயத்திலும், வங்கக்கடலிலும் மரணித்தவர்களை நினைவு கூருவோம்.

★ யுத்தத்தில் கருவிகளாக மாற்றப்பட்டுக் கொல்லப்படும் பெண்களை நினைவு கூருவோம்.

★ றுவாண்டாவிலும், பொஸ்னியாவிலும், பர்மாவிலும் அவலமுறும் பெண்களையும் குழந்தைகளையும் நினைவு கூருவோம்.

கிருஷாந்தி, ரஜனி படுகொலையில் குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக —

எமது சமூகத்தில் ரஜனி திரணகம, செல்வி போன்றவர்கள் உருவாகாமல் தடுக்கும் ஜனநாயக விரோத பாசிச நிலைப்பாட்டிற்கெதிராக —

பிரசார நோக்கத்திற்காகவும் யுத்தத்திற்காவும்பெண்களைக் கருவிகளாகப்பாவிப்பதற்கெதிராக —

காணாமல் போனோர், சித்திரவதைக்குள்ளாகுவோருக்காக —

மலையகப் பெண்களின் கைகளிலும் கால்களிலும் இடப்பட்டிருச்கும் விலங்குகளை உடைப்பதற்காக —

மத்திய கிழக்கு நாடுகளில் சகல விதமான அடக்குமுறைகளுக்குட்படுத்தப்படும் பெண்களுக்காக —

யுத்தம் புரிபவர்கள் துன்புறும் பெண்களையும் குழந்தைகளையும் ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. எனவே யுத்தத்திற்கெதிராக சமாதானத்திற்காக நாம் போராட வேண்டும்.

தற்போது எமது மக்கள் அனுபவிக்கும் கொடுமைகளிலிருந்து விடுபடுவதற்கான போசாட்டத்தில் பெண்களுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணி இருந்து கொண்டிருக்கிறது— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

வருடப்பிறப்பை முன்னிட்டு
புதிய ரக
**கைக்கடிகாரங்கள்**
**மலிவு விலையில்!**
(சகலவித மணிக்கூடுகளும் சகாய விலையில் திருத்திக் கொள்ளலாம்.)
த. தேவதாஸன்
**காங்கேசன்**
**வாச் வேர்க்ஸ்**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-260)

## வாழ்த்துகின்றோம்


### உயர்திரு. ப. விக்னேஸ்வரன்
(எஸ். எல். ஈ. ஏ. எஸ்.)
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

சங்கானைக் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக 1993 டிசம்பர் தொடக்கம் 1997 ஜனவரி வரை அரும்பணியாற்றி சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளது கல்வித்தரத்தையும் க. பொ. த. (உ/த), (சா/த), ஆண்டு 5 புலமைப் பரிசில் ஆகியவற்றின் பெறுபேறுகளை அதிகரிப்பதற்காக அரும்பெரும் கல்வித் தொண்டாற்றி யாழ். வலயம் I-ற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. ப. விக்னேஸ்வரன் அவர்களது சீரிய சேவையை நன்றியுடன் போற்றி அவர் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/சுழிபுரம் கிழக்கு அ. மி. த. க. பாடசாலை.**

(9361)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி
(07 - 03 - 1997)



### அமரர் செல்லப்பா குமாரவேலு
(முன்னாள் மாநகரசபை அங்கத்தவரும், சமாதான நீதிவானும், தந்தைசெல்வாவழி நின்று உழைத்தவரும், சமூக சேவையாளரும் கொடைவள்ளலும், கோட்டையம்பதி சிவசுப்பிரமணிய தேவஸ்தானத் தலைவரும்)

செல்லப்பா குமாரவேலு தமது 72 ஆவதுவயதில் வன்னி மாவட்டத்தில் 05 - 02 - 97 புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அவரது மறைவு யாழ். வண். வடமேற்கு தாமரை வீதி மக்களுக்கு ஈடு செய்ய முடியாத ஒரு பெரும் பேரிழப்பாகும். ஒரு சமூகத் தொண்டரை, நல்ல பண்பாளரை, தேசபக்தரை நாடு இழந்து நிற்கின்றது.

அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கோட்டையம்பதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவர் பிரிவால் துயருறும்:
**கோட்டையம்பதி**
**சிவசுப்பிரமணிய தேவஸ்தான**
**பரிபாலன சபையினர்.**

(9360)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.15, மெமோரியல் வீதி, மானிப்பாய். (மெமோரியல் ஆங்கில பாடசாலை முன்பாக) (45542)

கொழும்புத்துறையில் சகல வசதிகளுடன் இரண்டேமுக்கால் நிலப்பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு. பதிவுத் தபால் மூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும். யோ. சத்தியநாதன், சட்டத்தரணி & நொத்தாரிஸ், 34 (16), நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை. (45656)

சுத்த இன சில்க்கி முட்டையிடும் மூன்று பேடுகளும், சேவலும் அத்துடன் வெள்ளை கினிக் கோழிகள் மூன்றும் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. மனோன் மாஸ்ரர், அரசடி நவாலி தெற்கு, மானிப்பாய். [9359]

பல வர்ண துணிகளுடைய, சொக்கட்டான் தகரப்பந்தலும், (40 அடி) அழகிய காட்சிகளுடைய தட்டிசளும், தூண்களும், மணவறையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சீலன், பிள்ளையார் கோயிலடி, நெட்டிலிப்பாய், கோண்டாவில். [45611]

சாவகச்சேரி புகையிரத நிலைய ஒழுங்கையில், கட்டத்துடன் அமைந்துள்ள 3½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பொ. ச. ஞானசீலன், புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி. [சி/225]

## படம் அன்பளிப்பு

கெங்காதரானந்த மகரிஷியின் குருபூசை மார்ச் 8. ''நாம் உயர்கருமங்கள் ஆற்றிடவே பிறந்துள்ளோம்'' கெங்காதரானந்த மகரிஷியின் அழகிய படம்:- மில்க்வைற் நீலசோப்/பார்/மெடிக்கேற்றற் சோப்/ சலவைத்தூள், 5 மேலுறைகளுக்குக் கொடுக்கப்படும். ''மில்க்வைற்''. [சி/216]

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் கதைக்கப்பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் சந்தி). [45685]

## கற்கை நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் அலுவலக முகாமைத்துவம் என்னும் அடிப்படைக் கற்கை நெறி தொகுதி நான்கின் ஆரம்ப நாள் வைபவம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும். (ஐ)

## வட்டார மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 8

யேகோவாவின் சாட்சிகளின் தமிழ் வட்டாரமாநாடு இன்றும், நாளை ஞாயிற்றுக் கிழமையும் ஆனைப்பந்தி வித்தியாலயத்திலும்—

எதிர்வரும் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் சாவகச்சேரி பெரியமாவடியில் உள்ள ராஜ்ய மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

காலை 9.50 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். ''கொடுப்பதில் இருந்து மகிழ்ச்சியைப் பெறுங்கள்'' என்பதே இம்மாநாட்டின் தொனிப் பொருளாகும். (ஐ)

---

## வியாதியா? வாழ்க்கைபிரச்சினையா? பிசாசின் பிடியா?

இயேசு ஆன்மீக விடுதலை தருகிறார்

# அசெம்லி ஒப் கோட் (ASSEMBLY OF GOD)

14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

ஞாயிறு காலை 9.00மணி ஜெப விடுதலை ஆராதனை.

புதன் மாலை 4.00 மணி அற்புத சுகமளிக்கும் ஆராதனை.

எபநேசர் மண்டபம் ஊர்காவற்றுறை.

சனி காலை 8.00மணி ஜெப விடுதலை ஆராதனை.

(9353)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 06 — 11 — 1903

சிவபதம்: 18 — 02 — 1996

## அமரர் சின்னத்தம்பி சுந்தரம்

(இளைப்பாறிய அதிபர் - பிரபல சோதிடர்)

திதி: 08 - 03 - 1997

வெள்ளைத் திருநீறு நெற்றியிலே துலங்க
வெள்ளை மனம் கொண்ட சோதிடமணியே!
மேன்மைக் குணத்தோடு மேதினியில் வாழ்ந்தவரே
பெற்றிடுக பேரின்ப முத்திக் கரையை!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (சி-241)

---

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி புவனேஸ்வரி அரியராசா B.A

(ஆசிரியை, இ. த. க. பாடசாலை, தாவடி)

மலர்வு: 30 - 09 - 1941

உதிர்வு: 08 - 02 - 1991

திதி: 03 - 08 - 1997

அகில மெல்லாம் உங்கள் நினைவு
மக்கள் உள்ளத்தில் நிறைந்து நிற்கும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம் எந்நாளும்.

- குடும்பத்தினர்

''ஜெயந்தம்'',
தாவடி தெற்கு,
கொக்குவில். (45684)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 13 04 1942

உதிர்வு: 01 — 03 — 1997

## அமரர் சபாபதி இரத்தினசிங்கம்

(கே. கே. எஸ். சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

திதி: 08 - 03 - 1997

எம் அனைவரையும் நினையாப் பிரகாரமாக விட்டுப்பிரிந்த எங்கள் அன்புத் தெய்வமே! அன்புக்கோர் அணையாத விளக்காய் உதித்த ஆருயிர்ச் செல்வமே! எங்கள் நெஞ்சம் வாடுகின்றோம். உங்கள் ஆத்மா சாந்திபெற மாவை முருகனை வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

உடுவில் மேற்கு,
உடுவில், சுன்னாகம். (45682)

---

யாழ்ப்பாணக்கல்லூரி

# நன்றி செலுத்தும் ஆராதனையும் பிரியாவிடையும்

ஆசிரிய சேவையில் இருபத்தைந்து (25) ஆண்டுகளைப் பூர்த்தி செய்த

## திருமதி ஜீவா இரத்தினசபாபதி
## திரு. என். தற்பரானந்தன்

ஆகியோருக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை செவ்வாய்க்கிழமை 11ஆம் திகதி காலை 10-00 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசனக்கோயிலில் நடைபெறும். அதன் பின் பின்வரும் ஆசிரியர்களுக்கு பிரியாவிடை கூறும் வைபவம் மாணவர் ஆலோசனைக் குழுவினால் 11-30 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் நடைபெறும்.

பிரியாவிடை பெறுவோர்:

செல்வி எஸ்.எஸ். செல்வதுரை 40 வருட சேவை
திருமதி என். பாலசிங்கம் 29 வருட சேவை
திரு. ரி. நித்தியரட்ணம் 17 வருட சேவை

இக்கூட்டங்களுக்கு பெற்றோர், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-253) அதிபர்.

---

# இந்து மதகுருமார் ஒன்றியத்தின்

சார்பாக

# அஞ்சலிப் பிரார்த்தனை

6 - 02 - 97 இல் கொழும்பில் அமரத்துவம் எய்திய



## இந்து மத- குரு பீடாதிபதி கலாநிதி ஸ்கந்த சாம்பசிவசிவாச்சாரியார்

அவர்களை நினைவு கூர்ந்து,

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர்

தலைமையில் சங்கானை, இலுப்பத்தாள் முருகமூர்த்தி கோயிலுக்கு அருகாமையில் நாளை 9-3-97 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு அஞ்சலிப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்து மதகுருமார் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ச. மகேஸ்வரக் குருக்கள்,
தலைவர்
இந்து மத குருமார் ஒன்றியம்

(45674)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

## உதயன்

### மனமாற்றம் தேவை

நாட்டில் நிலவும் அரசியல் வன்முறைக் கலாசாரத்தை ஒழித்துக் கட்டுவதற்கு ஒத்துழைக்குமாறு அரசியல் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பதின்மூன்று கட்சிகளின் பிரதிநிதிகள் இக்கோரிக்கையை கூட்டறிக்கை ஒன்றின் மூலம் வலியுறுத்தி உள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு தென்னிலங்கையில் அரசியல் வன்முறைகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

இந்த அழைப்பு விடுக்கப்படுவதைக் கருத்திற் கொண்டு, ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றைக் கையளிப்பதற்கான இறுதி நாள் இம்மாதம் ஐந்தாம் திகதியிலிருந்து பதினைந்தாம் திகதியாக நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள், வேண்டுகோள்கள் குறிப்பிடத்தக்கவையே. ஆனால் இதில் ஒருமாறுபட்ட கோலம் தெரிகிறது.

ஆயுதங்களை வைத்துக் கொண்டு அரசியல் வன்செயல்களில் ஈடுபடுபவர்கள் பொது நிறுவனங்களில் உள்ளவர்களோ, மதத் தலைவர்களோ பொது வாழ்வில் ஈடுபாடு உடையவர்களோ. அல்லர். அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களே, அரசியல் வாதிகளே தெற்கின் அரசியல் வன்முறைகளின் பின்னணியில் உள்ளார்கள்; சூத்திரதாரிகளாக விளங்குகிறார்கள்.

அப்படியிருக்க, அரசியல் கட்சித் தலைவர்கள் தமக்குத் தாமே கோரிக்கை விடுத்து அறிக்கை வெளியிடுவது எந்தளவில் எதிர்பார்க்கும் பலனைத் தரும் என்ற கேள்வி எழுகிறது.

இவர்கள் அறிக்கை விடுவதற்குப் பதிலாகத் தமது ஆயுதங்களை ஒப்படைத்து அரசியல் வன்முறைகளைக் கைவிடுவதற்கு மனமாற்றம் பெற வேண்டும். அடுத்தவனை அடித்து வீழ்த்தி வாக்குத் தேடுவதில் நம்பிக்கை வைப்பதைக் கைவிட்டு, தமது சொந்தக் கொள்கைகளை — மக்கள் மேம்பாட்டுக்கான செயல் திட்டங்களை— முன்வைத்து வாக்குத் திரட்டுவதில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

அப்படி ஒரு நிலை உருவானால் — அரசியல் வாதிகளிடம் அரசியல் கட்சிகளிடம் மனமாற்றம் ஏற்பட்டால் — அரசியல் வன்முறைகள் எந்தவித தடையுமின்றிப் பறந்தோடிவிடும்.

ஜே. வி. பி. வன்முறைகளின் போது அரசியல் தலைவர்களுக்கு— எம். பிக்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கு — மொத்தம் 3,297 ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் இதுவரை 1,419 ஆயுதங்கள் மட்டுமே திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

அதாவது அரைவாசிக்கு மேற்பட்ட ஆயுதங்கள் இன்னமும் அரசியல் தலைவர்களிடமே உள்ளன. அப்படியிருக்க ஆயுதங்களைக் கையளிக்குமாறு அவர்கள் கூட்டறிக்கை வெளியிடுவதும் கோரிக்கை விடுவதும் பெரும் வேடிக்கையே.

பேசுவதும், எழுதுவதும் ஒன்றாக இருக்க செயற்பாடு அதற்கு மாறாக இருக்கும் பழக்கத்தை அரசியல் வாதிகள் மனமுணர்ந்து நிறுத்தினால் பல பிரச்சினைகள், நெருக்கடிகள். தாமாகவே நீங்கிவிடும். அந்த வழியில் சிந்தித்தால் என்ன……?

# பயிற்சியிலுள்ள பொலீஸாரையே தேர்தல் கடமையில் ஈடுபடுத்த முடிவு

கொழும்பு, மார்ச் 8

வடக்கு — கிழக்கு மற்றும் பொலனறுவை, புத்தளம் பகுதிகளில் பொலீஸார் பெருமளவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால், தேர்தல் கடமைக்காக தற்சமயம் பயிற்சியில் உள்ள பொலீஸாரையே ஈடுபடுத்த பொலீஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

தேவை ஏற்படும் பட்சத்தில் பாதுகாப்புப் படையினரின் உதவியைப் பெற பிரதேச பொலீஸ் அதிபர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் 2 பொலீஸாரும், 6 வாக்களிப்பு நிலையங்களுக்கு இடையில் நடமாடும் ரோந்துப் பணிக்கு 6 பொலீஸாரும் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் —

தொடர்பு சாதனங்கள் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் — தேர்தல் கடமையில் ஈடுபடும் சிரேஷ்ட அதிகாரிகள் கோரியுள்ளனர்.

தேர்தல் கடமைக்கு 30 ஆயிரம் அரச ஊழியர்கள் தேவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் பணிக்காக ஆயிரம் வாகனங்கள் தேவை என தேர்தல் திணைக்களம் அரசிடம் விண்ணப்பித்துள்ளது.

## மதுவரி நிலைய அதிகாரியாக நியமனம்

கொழும்புத்துறை, மார்ச் 8

பருத்தித்துறை மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி திரு. நா. சோதிநாதன் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மல்லாகம் ஆகிய பகுதிகளின் மதுவரி நிலையங்களுக்கான பொறுப்பதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சீனி விலை குறைப்பு

தென்மராட்சி, மார்ச் 8

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள தனியார் வர்த்தக நிறுவனங்களில் சீனியின் விலை குறைந்துள்ளது.

ஒரு கிலோ சீனி ரூபா 36 ஆக விற்கப்படுகிறது.

இதேவேளை இப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மக்கள் கடைகளிலும், வர்த்தக திணைக்களக் கிளைகளிலும் ஒரு கிலோ சீனி 40 ரூபாவாக விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

# அயுதங்களை ஒப்படைக்குமாறு அனுருத்த மீண்டும் கோரிக்கை

## தேர்தலுக்கு இடையூறாக இருக்க வேண்டாம் என்கிறார்

கொழும்பு மார்ச் 8

''நீண்டகாலத்திற்குப் பின்னர் நாம் நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் ஒன்றை அமைதியான சூழ்நிலையில் நடத்த வேண்டும். அதனால் அதற்கு இடையூறாக இருக்கும் சட்டவிரோதமான ஆயுதங்களை மீளக் கையளியுங்கள். நாம் சோதனை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை கைது செய்த பின்னர் அரசியல் பழிவாங்கல் மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்ட வேண்டாம்.

அவசரகால நிலைமையை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தில் பேசுகையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஆயுதங்களுடன் நடமாடுபவர்களை கண்ட இடத்தில் கைது செய்யுமாறு பொலீஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும்—

834 றிவோல்வர்கள், ஆயிரத்து 117 ரிபீட்டர்கள், ஆயிரத்து 346 துப்பாக்கிகள் என்ற வகையில் எல்லாமாக மூவாயிரத்து 297 ஆயுதங்கள் மீளப்பெறவேண்டியுள்ளதாகவும்— அமைச்சர் தெரிவித்தார்.

(இ-5)

# பஸ் விபத்தில் இறந்தவர் துன்னாலை வாசி

கொழும்பு மார்ச் 8

வவுனியாவில் இருந்து திருகோணமலைக்கு அகதிகளைஏற்றிச்சென்றபஸ்விபத்துக்குள்ளானதில் இறந்தவர் துன்னாலையைச் சேர்ந்த அண்ணாமலை மாணிக்கம் (வயது 87) என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 29 பேர் காயமடைந்தது தெரிந்ததே.

காயமடைந்த 29 பேரில் கடுங்காயங்களுக்குள்ளான ஏழு பேர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஏனையோர் நேற்று முன்தினம் பஸ்மூலம் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (இ-5)

# சிங்களவருக்கு மட்டுமே வாக்களிக்க உரிமை வேண்டும்

## பௌத்த துறவியின் ஆசை இது

கொழும்பு, மார்ச் 8

இலங்கையில் சிங்கள மக்களுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

— இவ்வாறு தனது ஆசையை வெளியிட்டிருக்கிறார் பௌத்த துறவி ஒருவர்.

கொழும்பு 9, வஜிரஞான மாவத்தையில் உள்ள பிரதாகர மகா விகாரையின் பிரதம பிக்குவான பஞ்ஞானந்த தேரரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க என அமைக்கப்பட்ட ஆணைக்குழு உறுப்பினர்கள் கடந்த மாதம் 23 ஆம் திகதி கொழும்பு பௌத்த காங்கிரஸ் மண்டபத்தில் கூடினர். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட மேற்படி பௌத்த துறவி தனது 35 யோசனைகள் அடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தார். அந்த மகஜரிலேயே தனது விருப்பத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் தேசிய மொழியாகவும் அரச கரும மொழியாகவும் சிங்களம் மட்டுமே இருக்க வேண்டும் என்றும் அவர் அந்த மகஜரில் கோரியுள்ளார்.

ஆனால் அவரது அந்த மகஜர் எழுதப்பட்ட கடிதத் தலைப்பு தனி ஆங்கிலத்தில் மட்டுமே அச்சிடப்பட்டிருந்தது என்றும் —

அதில் மருந்துக்கு கூட ஒரு சிங்கள எழுத்து இடம் பெறவில்லை என்றும் கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று சுட்டிக்காட்டியிருக்கிறது. (ஐ-10)

# வீடு பார்க்கச் சென்ற இருவர் இன்னும் திரும்பி வரவில்லை

தென்மராட்சி மார்ச் 8

வடமராட்சி கிழக்கு வத்திராயனில் இருந்து உடுத்துறையில் உள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற இரண்டு இளைஞர்கள் கடந்த வியாழன்வரை வீடு திரும்பவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வீடு பார்க்கச் சென்ற வச்சிரவேலு அசோக்குமார் (வயது 18) ஆண்டி ஐயா குகேந்திரன் (வயது 17) ஆகியோரே காணாமற் போனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## நூல் வெளியீடு

விநாயகப்பெருமான், சிவபெருமான், முருகப்பெருமான், வைரவப்பெருமான் ஆகிய மூர்த்தங்களின் மண்டபப் பூசைகளை உள்ளடக்கி ''யாக மண்டபப் பூசை'' என்னும் தொகுப்புநூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

## பொதுக் கூட்டம்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை மானிப்பாயில் உள்ள கொத்தணியின் படிப்பக மண்டபத்தில் காலை 10 மணியளவில் நடைபெறும்.

## பாடநூல்கள்

திருநெல்வேலி, மார்ச் 8

சங்கானை கல்விக் கோட்டத்துக்கு இவ் வருடத்துக்கான இலவச பாட நூல்கள் வந்து சேர்ந்துள்ளன. இப்பிரிவிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் இப் பாட நூல்கள் இவ்வாரம் பங்கிடு செய்யப்பட்டு விநியோகிக்கப் படவிருப்பதாக சங்கானை கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தெரிவித்தார்.

(இ-135)

# மாலைதீவு தூதராக ஹுசேன் முஹம்மது?

கொழும்பு, மார்ச் 8

ஐ. தே. கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்து முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள ஐ. தே. கட்சி அரசின் முன்னாள் சபாநாயகர் எம்.எச். முஹம்மதுவின் மகன் ஹுசேன் முஹம்மது மாலைதீவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கை இராஜதந்திரிகளையும் தூதுவர்களையும் மாற்றுவது என்ற அரசின் திட்டத்தின் கீழ் மாலைதீவில் உள்ள தூதுவர் அழைக்கப்பட்டு அவரது இடத்திற்கு பெரும்பாலும் ஹுசேன் முஹம்மது நியமிக்கப்படலாம் என 'யுக்திய' பத்திரிகை தெரிவிக்கிறது.

(இ-10)

## நாளை

**மாசி 26**

**ஞாயிற்றுக்கிழமை**

திதி: அமாவாசை, முற்பகல் 7-43 வரை. பிரதமை வைகறை 5.31 வரை.

நட்சத்திரம்: பூரட்டாதி முன்இரவு 10.08 வரை.

ராகுகாலம்: 4.54–6.24

சுபநேரம்: 9.24–10.54

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ★ சீனக்குடா தாக்குதலை அடுத்து

# பாதுகாப்பு ஏற்பாடுகள் பயணிகள் கஷ்டம்

கொழும்பு, மார்ச் 8

சீனக்குடா விமானத்தளம் புதனன்றுஇரவு தாக்குதலுக்கு இலக்கானதை அடுத்து அங்கு மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளினால் கப்பல் பயணிகள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்துள்ளனர்.

400 பயணிகளுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த 'சஜிந்தா' என்ற கப்பல் திருமலைதுறைமுகத்துக் கரைக்கு அப்பால் நடுக்கடலிலேயே நிறுத்தப்பட்டது. பயணிகள் அனைவரும் கப்பலில் இருந்து இழுவைப்படகுகளில் இறக்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டனர்.

இதேபோல் அங்கிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட பயணிகளும் இழுவைப்படகுகள் மூலம் கரையில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு நடுக்கடலில் வைத்தே கப்பலில் ஏற்றப்பட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ...

# யாழ். புனர்வாழ்வுப் பணிகளுக்கு இந்தியா ரூ. 8 கோடி 7 லட்சம் உதவி

## ஈ. பி. டி. பியின் கோரிக்கைக்கு இணக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ்ப்பாண மாவட்ட மக்களின் புனர்வாழ்வுத் திட்டங்களுக்காக இலங்கை நாணயத்தில் மொத்தம் எட்டுக் கோடியே ஏழு லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளைச் செய்வதற்கு இந்தியா முன் வந்துள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ. பி. டி. பியின்) செயலாளர் நாயகம் இந்தியா சென்றிருந்த வேளை அரசுத் தலைவர்களிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று மேற்படி உதவிகளைச் செய்ய சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய நிதி உதவியைக் கொண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்களும் அவற்றின் மதிப்பீடுகளும் வருமாறு:-

**பஸ்கள்**

40 பயணிகள் பிரயாணம் செய்யும் இருபது பஸ்களும், 30 பயணிகள் பிரயாணம் செய்யும் இரண்டு பஸ்களுமாக மொத்தம் 22 டாட்டா பஸ்கள் உடனடியாகத் தருவிக்கப்படும். சிறிய பஸ்கள் யாழ். பல்கலைக்கழகம், நெடுந்தீவு போக்குவரத்துத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும். இவற்றின் மொத்தப் பெறுமதி 3 கோடியே 70 லட்சம் (இலங்கை) ரூபாவாகும்.

**இயந்திரப் பாதை**

காரைநகர் — ஊர்காவற்றுறை கடற்பாதைப் போக்குவரத்துக்காக இயந்திரப் பாதைப் படகு ஒன்று தருவிக்கப்படும். அதன் பெறுமதி 35 லட்சம் ரூபாவாகும்.

**லொறிகள்**

யாழ். மாவட்டத்திற்குள் கட்டடப்பொருள்களை ஏற்றி இறக்குவதற்கான 5 தொன் கொள்ளளவுடைய திறந்த லொறிகள் ஐந்து தருவிக்கப்படும். இந்த லொறிகள் வடக்கு — கிழக்கு மாகாணக் கட்டடத் திணைக்களத்தின் பொறுப்பில் இருக்கும்.

**இழுவை டிராக்டர்கள்**

யாழ். ஆஸ்பத்திரி, யாழ். மாநகரசபை, பருத்தித்துறை நகர சபை, சாவகச்சேரி நகர சபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை, காரைநகர் பிரதேச சபை ஆகியனவற்றுக்கு குப்பை கூளங்களை அகற்றுவதற்காக ஒவ்வொரு இழுவை டிராக்டர்கள் தருவிக்கப்படும். நயினாதீவு, அனலைதீவுப் பகுதிகளின் தண்ணீர் விநியோகத்துக்காகவும் ஒவ்வொரு இழுவை டிராக்டர்கள் தருவிககப்படும். வடக்கு — கிழக்கு மாகாண கட்டடத் திணைக்களத்தின் பாவனைக்கும் இரண்டு இழுவை டிராக்டர்கள் கொண்டு வரப்படும்.

இத்தப் பத்து இழுவை டிராக்டர்களினதும், மொத்தப் பெறுமதி எழுபது லட்சம் ரூபாவாகும்.

**தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள்**

தண்ணீர் விநியோகச் சேவையில் ஈடுபடவுள்ள இழுவை டிராக்டர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், அவற்றுக்கான மாற்று இயந்திரங்கள் என்ற வகையில் மொத்தம் நான்கு இயந்திரங்கள் தருவிக்கப்படும். உரிய கோஸ் பைப்புகளும் கொண்டு வரப்படும்.

இவற்றின் மொத்தப் பெறுமதி பத்தாயிரம் ரூபாவாகும்.

**தண்ணீர் தாங்கிகள்**

தண்ணீர் விநியோகம் செய்யப்படும் இடங்களில் பொருத்தப்படுவதற்காகவும், இழுவை டிராக்டர்களில் பொருத்தப்படுவதற்காகவும் மொத்தம் 10 இழையத் தாங்கிகள் கொண்டு வரப்படும்.

இவற்றின் மொத்தப் பெறுமதி ஒரு லட்சத்து அறுபதினாயிரம் ரூபாவாகும்.

**தண்ணீர் பவுசர்கள்**

காரைநகர், நெடுந்தீவு, வேலணை, புங்குடுதீவு, ஆகிய இடங்களில் தண்ணீர் விநியோகம் செய்வதற்காக நீரிறைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட தண்ணீர் பவுசர் ஒவ்வொன்று தருவிக்கப்படும். இதே போன்ற இரண்டு பவுசர்கள் கட்டடத் திணைக்களத்துக்காகவும் தருவிக்கப்படும். இவற்றின் மொத்தப் பெறுமதி 66லட்சம் ரூபாவாகும்.

**கட்டடப் பொருள்கள்**

மாவட்ட இணைப்புக் குழுவின் வழிகாட்டுதலில் மக்களுக்கு விநியோகிக்கவென ஆயிரம் தொன் சிமெந்து (பெறுமதி: 60 லட்சம் ரூபா), முப்பதாயிரம் தொன் உருக்குக் கம்பி (பெறுமதி: 30 லட்சம் ரூபா) பத்து லட்சம் செங்கற்கள் (பெறுமதி: 15 லட்சம் ரூபா), இரண்டு லட்சம் ஓடுகள் (பெறுமதி: 16 லட்சம் ரூபா), பத்தாயிரம் முகட்டு ஓடுகள் (பெறுமதி 1 லட்சம் 50 ஆயிரம் ரூபா), தருவிக்கப்படும். இக்கட்டடப் பொருள்கள் கட்டடத் திணைக்களத்தின் பாதுகாப்பில் வைக்கப்படும். இப்பொருள்கள் இந்தியாவிலிருந்து நேரடியாக காங்கேசன், பருத்தித்துறை துறைமுகங்களுக்கு எடுத்து வரப்படும்.

இவற்றின் மொத்தப்பெறுமதி பன்னிரண்டு கோடியே இரண்டரை லட்சம் ரூபாவாகும்.

**அப்பியாசக் கொப்பிகள்**

மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக பத்து லட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் கொண்டு வரப்படும். (அ)

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
**சுந்தரம்பிள்ளை மணிவண்ணன்**
**(B. A, ஆசிரியர்)**

அவர்களின் வீட்டுக் கிரியை நாளை 09 - 03 - 97 ஞாயிற்றுக்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும். அந்த வைபவத்திலும், அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள், அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

30, கடைச்சாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(45673)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



மலர்வு: 20 — 11 — 1911
உதிர்வு: 07 — 02 — 1997

**அமரர் R.S. இராமநாதன் (கொறனர்)**

அன்னாரின் சிரார்த்த தினமும், வீட்டுக் கிருத்தியமும் 09 - 02 - 97 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதில் கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

லண்டனில் இருக்கும்
**மனைவி, மகன், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள் சார்பில்,**
**வி. சேதுநாயகம் (மைத்துனர்)**

தும்பளை,
பருத்தித்துறை.

(45532)

---

# தமிழக விஞ்ஞானி மரணம்

புகழ்பெற்ற இந்திய விண்வெளி விஞ்ஞானி டாக்டர் ஜி. பத்மநாபன் நேற்று முன்தினம் சென்னையில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் உயிரிழந்தார்.

விக்ரம் சாராபாய் விண் [illegible] வெளி ஆயுதங்கள் தொடர்பான குழுவின் தலைவராக இவர் விளங்கினார். (ஐ)

---

# தேர்தலைக் கண்காணிக்க உள்ளூர் பிரமுகர்கள் குழு

கொழும்பு மார்ச் 8
"உள்ளூராட்சி தேர்தல்களை கண்காணிப்பதற்கு உள்ளூர் பிரமுகர்களைக் கொண்ட தேர்தல் குழு நியமிக்கப்படும். வெளிநாடுகளிலிருந்தோ அல்லது சார்க் நாடுகளிலிருந்தோஎவரையும் அழைக்கும் உத்தேசம் கிடையாது."

இப்படி தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த உள்ளூர் கண்காணிப்புக் குழுவில் நீதியும் நியாயமுமான தேர்தலுக்கான இயக்கம், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம்பெறுவார்கள் என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற சமயம் வெளிநாட்டுக் கண்காணிப்புக்குழு அழைக்கப்பட்டது தெரிந்ததே. (இ-4)

---

## யாழ். மாவட்டத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்)

அரச அதிபர் அந்த மாநாட்டில் எடுத்துரைத்தார்,

இவ்விடயம் மாநாட்டில் ஆராயப்பட்டு தெல்லிப்பழையில் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைப்பது என்றும்—

யாழ்ப்பாண மாவட்டத்தில் கைதாவோரை அடுத்த மாதத்தில் இருந்து தெல்லிப்பழையிலேயே வைத்துப் புனர்வாழ்வு அளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தெல்லிப்பழையில் புனர்வாழ்வு நிலையத்தை உடனடியாக அமைக்கும் ஏற்பாடுகளைச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. (அ-3)

---

## மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

இக்கூட்டம் நடைபெறுகிறது.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், பிரதி பிரதம செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள், மாகாண சபை அதிகாரிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி அரச அதிபர்கள், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்கள், அமுலாக்கல் ஸ்தாபன காரணகர்த்தாக்கள், தொடர்புள்ள அமைச்சுக்கள் மாகாண சபைகளின் மாகாணத் தலைவர்கள், பகுதிப் பிரதேச செயலர்கள் இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளின் பிரதேச முகாமையாளர்கள், வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் ஆகியோர் இன்றைய கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

★ கஷ்டங்களையும், இன்னல்களையும் எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு நம்பிக்கை ஊட்டல்.

★ யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களை அப்பாதிப்புக்களில் இருந்து மீட்டல்.

★ மக்கள் சேவையில் உள்ள அதிகாரிகளுக்கு மத்திய, மாகாண அரசுகளில் உள்ள தடைகளை நீக்கி, இலகுவாகப் பணிகளை அவர்கள் மேற்கொள்ள வழிகாட்டவும், உறுதுணையாகவும் இருத்தல்.

★ நாளாந்த பிரச்சினைகளை அரசுக்கு எடுத்துக் கூறும் மேடையாகவும் இந்த இணைப்புக் குழுவைப் பயன்படுத்தல்.

மேற்படி பிரதான இலக்குகளை முன்வைத்தே மாவட்ட இணைப்புக்குழு செயற்படும் என்று இணைப்புக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா உதயனுக்குத் தெரிவித்தார். (அ-3)

---

# புலிகளின் வள்ளம் அழிப்பு என தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8
புல்மோட்டைக்கும். கொக்கிளாய்க்கும் இடையில் கடற்படையினர் விடுதலைப் புலிகளின் சக்தி வாய்ந்த வள்ளம் ஒன்றைத் தாக்கி அழித்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த வள்ளத்தில் சென்ற சகலரும் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் —

கடந்த புதன்கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றது என்றும் — மேலும் வெரிவிக்கப்பட்டது. (இ-3)

---

## இரணைதீவுக்கு.

(முதலாம் பக்கத் தொடர்)

குப் பொருள்களை விநியோகிப்பதற்கென 40 ஆயிரம் ரூபா கொடுத்து, இந்த வள்ளத்தையும், மாலுமிகளையும் வாடகைக்கு அமர்த்தியிருந்தனர் என்றும் —

கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜை ஒருவரிடம் இருந்து இது சம்பந்தமான கடிதம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் 8 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை நாச்சிக்குடாப் பகுதியில் வைத்து கைது செய்தது என்றும் —

கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தே மீனவரைக் கைதுசெய்தனர் என்றும் — 'தூரதர்ஷன்' நேற்றுத் தெரிவித்தது. (இ-3)

---

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்ய பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 252 வரை அனுமதி கிடைத்துள்ளது.

இப்பட்டியலில் உள்ளவர்களைப் பதிவு செய்யுமாறும் — கேட்கப்பட்டுள்ளது.

விமானத்தில் பயணம் செய்பவர்கள் அவர்களின் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு விலாசங்களைத் தருமாறும் —

பயணம் செய்பவர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும் என்றும் — கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

---

## வறுமை நிவாரண...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

இந்தச் சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்ட ஏனைய விடயங்கள் வருமாறு:-

★ நெல் கொள்வனவை அரச அதிபர்களின் மேற்பார்வையில் மேற்கொள்ளல். இதற்காக நெல் கொள்வனவு முகவர்கள் தெரிவுசெய்யப்படுவர். அவர்களுக்கு குறைந்த வட்டியுடன் 5 இலட்சம் ரூபாவை மக்கள் வங்கி ஊடாகக் கடனாக வழங்குதல்.

★ உள்ளூராட்சி மன்றங்களின் விசேட ஆணையாளர்களாக உள்ள பிரதேச செயலர்களின் பணிகள் ஒழுங்காக நடக்க அரச அதிபர்கள் மேற்பார்வை செய்தல்.

★ தமிழ் — சிங்கள புத்தாண்டை சிறப்பாக மேற்கொள்ள அரச அதிபர்கள் ஏற்பாடு செய்தல்.

★ வடக்கு—கிழக்கு அரச அதிபர்கள் தளநிலைமைக்கு ஏற்றவாறு முடிவுகளை மேற்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் வழங்குதல். (இ-3)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் [illegible] லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org